## October 17, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவுக்கு தலைசிறந்த நிர்வாகத்திறன் கொண்ட இளைஞர்களைத் தேர்வு செய்து வழங்கும் உன்னதப்பணியை கடந்த 99 ஆண்டுகளாக மேற்கொண்டுவரும் இந்திய குடிமைப் பணிகள் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) தனது நூறாவது ஆண்டில் பெருமிதத்தோடு பயணிக்கிறது.
   - i. இந்திய நாட்டின் பெருமைகளுள் ஒன்றாக விளங்குகிற வேற்றுமையில் ஒற்றுமை என்பதை நிலைநாட்டும் விதமாக இனம், மொழி, ஜாதி, சமயங்களைக் கடந்து நாடு முழுவதும் வாழ்கிற பல்வேறு பின்புலங்களைக்கொண்ட தேர்வர்களைத் தேர்வு செய்து நாட்டுக்கு வழங்கும் ஒப்பற்ற பணியை குடிமைப் பணிகள் தேர்வாணையம் செய்து வருகிறது.
   - ii. ஜனநாயகமும் சமூக நீதியும் நிலைநாட்டப்படுவதற்கு பல்வேறு ஏற்பாடுகளை நமது இந்திய அரசமைப்பு செய்துள்ளது. அவ்வாறான ஏற்பாடுகளில் ஒன்றுதான் இந்திய குடிமைப் பணிகள் தேர்வாணையம் ஆகும்.
   - iii. இந்த ஆணையம் இந்திய குடிமைப் பணிகள், மருத்துவப் பணிகள், பொறியியல் பணிகள், பொருளாதாரப் பணிகள், வனப்பணிகள் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கான தேர்வுகளை நடத்தி வருகிறது. தற்போது இந்திய குடிமைப் பணிகளுக்காக 1,000-க்கும் மேற்பட்ட தேர்வர்களை ஆண்டுதோறும் தேர்வு செய்யும் அமைப்பாக செவ்வனே செயல்பட்டு வருகிறது.
   - iv. இந்திய குடிமைப் பணிகள் வரலாற்றைப் பொருத்தவரை ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் கீழ் கி.பி. 1790-களில் வங்க கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் பிரபு கட்டமைப்பு ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட அரசுப் பணிகளை உருவாக்கினார்.
   - v. அடுத்து வந்த வெல்லெஸ்லி பிரபு 1800-இல் கொல்கத்தாவில் குடிமைப் பணியாளர்கள் பயிற்சி பெற வில்லியம் கல்லூரியை உருவாக்கினார்.
   - vi. ஆனாலும், 1806-ஆம் ஆண்டு பிரிட்டனில் ஹெய்லி பரியில் கிழக்கிந்திய கம்பெனியின் கல்லூரிக்கு இதற்கான பயிற்சி மாற்றப்பட்டது.
   - vii. பின்பு குடிமைப் பணிகள் தேர்வுக்காக ஒரு கட்டுப்பாட்டு வாரியம் உருவாக்கப்பட்டது.
   - viii. 1853-ஆம் ஆண்டு வரை கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்களே குடிமைப் பணி அலுவலர்களை பெரும்பாலும் நியமித்தனர். இந்தியாவில் உள்ள குடிமைப் பணிகள் இந்தியர்களால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்தியாவில் எழத் தொடங்கியது.
   - ix. இதில் குறிப்பிடத்தக்க மாற்றம் 1853-ஆம் ஆண்டு டல்ஹௌசி பிரபு காலத்தில் நிகழ்ந்தது. மெகாலே பிரபு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு பணியாளர்களின் தேர்வு என்பது போட்டித் தேர்வு மூலம் நடைபெற வேண்டும் எனப் பரிந்துரைத்தது. இதன்படி 1856-ஆம் ஆண்டு கட்டுப்பாட்டு வாரியம் அதன் முதல் போட்டித் தேர்வை நடத்தியது.
   - x. 1861-ஆம் ஆண்டு குடிமைப் பணிகளுக்கான சட்டத்தின் படி இந்தியாவில் 7 ஆண்டுகள் வசிக்கிற ஐரோப்பியரோ அல்லது இந்தியரோ அதிகாரமிக்க பதவிகளுக்கு வரலாம் எனக் குறிப்பிடப்பட்டது.
   - xi. 1885-ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு குடிமைப் பணிகளில் இந்தியமயமாக்கலுக்கான அழுத்தம் அதிகரித்தது.
   - xii. 1886-ஆம் ஆண்டு அட்சிசன் குழு இந்திய குடிமைப் பணிகளை இம்பீரியல், மாகாண மற்றும் துணைப் பணிகள் என மூன்றாகப் பிரித்தது.

xiii. 1912-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இஸ்லிங்டன் பிரபு தலைமையிலான குழு இந்தியாவில் குடிமைப் பணிகளில் 5% இந்தியர்கள் மட்டுமே உள்ளனர் என்றும் 25% ஒதுக்கீடு இந்தியர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும் முன்மொழிந்தது.

xiv. 1919-ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் பொதுப் பணிகளுக்கான ஆணையம் ஒன்றை அமைக்க பரிந்துரைத்தது.

xv. அதன் பிறகு, 1923-ஆம் ஆண்டு லீ பிரபு தலைமையில் அமைக்கப்பட்ட குடிமைப் பணிகளுக்கான ராயல் ஆணையம் குடிமைப்பணிகளை அகில இந்தியப்பணிகள் மத்திய பணிகள் மற்றும் மாகாணப்பணிகள் என மூன்றாகப் பிரித்தது. இந்த ஆணையத்தின் பரிந்துரைப்படி 1.10.1926 அன்று சர் ரோஸ் பார்க்கர் தலைமையில் இன்றைய பொதுப் பணிகளுக்கான தேர்வாணையம் அமைக்கப்பட்டது.

xvi. ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியின் கீழ் ஒரு பரிசோதனையாக, வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் இது தொடங்கியது.

xvii. இந்திய அரசு சட்டம், 1935 இதை மத்திய பொதுப் பணிகளுக்கான தேர்வாணையமாக உயர்த்தியது. நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு அதிகப் பங்கை வழங்கியது.

xviii. 1950-இல் அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மூலம், இந்திய குடிமைப் பணிகள் தேர்வாணையமாக அதன் தற்போதைய நிலையை ஏற்றுக்கொண்டது.

2. கடந்த 1953-இல் உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் மனிதர்களை முதல்முறையாக ஏற்றி சாதனை படைத்த குழுவில் உயிரோடு இருந்த கடைசி நபரான காஞ்சா ஷெர்பா (92) மரணமடைந்தார்.

   i. நியூஸிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரியையும் அவரது வழிகாட்டியான தென்ஜிங் நோர்கோவையும் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சிக்கு ஏற்றி சாதனை படைத்த 35 பேர் குழுவில் காஞ்சா ஷெர்பா இடம் பெற்றிருந்தார்.

   ii. ஹிலாரியும், தென்ஜிங்கும் உச்சியை அடைவதற்கு முந்தைய கடைசி முகாம் வரை சென்ற மூன்று ஷெர்பாக்களில் காஞ்சாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

3. ஒலிம்பிக் போட்டிகளில் 4 முறை தங்கப் பதக்கம் வென்றவரும், ஆஸ்திரேலியாவை சேர்ந்த நீச்சல் வீராங்கனையுமான அரியேர்ன் டைட்மஸ் (25) ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

4. உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 42 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் அரசாணைக்கு தெலங்கானா உயர்நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையை எதிர்த்து மாநில அரசு தொடுத்த மேல்முறையீட்டு மனுவை உச்சநீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

   i. உள்ளாட்சித் தேர்தலில் முன்பு கடைப்பிடிக்கப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டு முறையையே பின்பற்ற வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

   ii. உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 42 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறை வேற்றுவதாகக் கூறி தெலங்கானா அரசு கடந்த செப்டம்பர் 26-ஆம் தேதி அரசாணை வெளியிட்டது.

   iii. இந்த அரசாணைக்கு கடந்த அக்டோபர் 9-ஆம் தேதி தெலங்கானா உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

   iv. இதையடுத்து கடந்த, செப்டம்பர் 29-ஆம் தேதி வெளியிடப்பட்ட உள்ளாட்சி தேர்தல் அறிவிப்பை நிறுத்திவைப்பதாக அக்டோபர் 9-ஆம் தேதி மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

v. முன்னதாக, உள்ளாட்சி அமைப் புகளிலும், வேலைவாய்ப்பு, கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் 42 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கப்படும் என்று கடந்த ஆண்டு தெலங்கானா பேரவையில் காங்கிரஸ் தலைமையிலான அரசு இரு மசோதாக்களை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பிவைத்தது.

vi. இந்த மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கடந்த ஆகஸ்ட் 6-ஆம் தேதி புது தில்லியில் முதல்வர் ரேவந்த் ரெட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

5. இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை இலங்கை மண்ணில் இருந்து மேற்கொள்ள ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என அந்நாட்டு பிரதமர் ஹரிணி அமரசூர்யா தெரிவித்தார்.

i. மூன்று நாள் சுற்றுப்பயணமாக இந்தியாவுக்கு வந்த ஹரிணி அமரசூர்யாதில்லி பல்கலைக் கழகத்தின்கீழ் செயல்படும் ஹிந்து கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இவ்வாறு பேசினார். இவர் இந்தக் கல்லூரியில் 1994-இல் சமூகவியல் பட்டப்படிப்பை நிறைவு செய்தவராவார்.

ii. பிரதமராக பதவியேற்றபின் முதல் முறையாக இந்தியப் பயணம் மேற்கொண்டுள்ள ஹரிணி அமரசூர்யா வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

6. மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027-இன் முதல் கட்ட நடைமுறைக்கான முன்னோட்டப் பயிற்சி நவ.10-இல் தொடங்கி நவ.30 வரை நடைபெறவுள்ளதாக மத்திய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

i. இதுதொடர்பான மத்திய அரசின் அறிவிக்கையில், எண்ம சுய பதிவு முறையின்கீழ் குடிமக்கள் தங்கள் தகவல்களை நவ.1 முதல் 7 வரை தாமாகவே பதிவு செய்துகொள்ளலாம் என இந்திய பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர் மிருத்யுஞ்ஜய குமார் நாராயண் தெரிவித்தார்.

ii. 16-ஆவது மக்கள்தொகை கணக்கெடுப்பு 2026-இல் தொடங்கி 2027 வரை இரு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

iii. 2026, ஏப்.1-ஆம் தேதி தொடங்கும் முதல்கட்ட கணக்கெடுப்பில் வீடுகளை பட்டியலிடும் நடைமுறை, வீடுகளின் நிலை, ஒவ்வொரு வீட்டின் சொத்துகள் மற்றும் வசதிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படவுள்ளன.

iv. 2027, பிப்.1-ஆம் தேதி தொடங்கும் இரண்டாம்கட்ட கணக்கெடுப்பில் ஒவ்வொரு வீட்டில் உள்ள நபர்களின் எண்ணிக்கை, சமூக பொருளாதார நிலை, கலாசாரம் உள்ளிட்ட பிற தகவல்கள் சேகரிக்கப்படவுள்ளன. இந்தப்பணியில் 34 லட்சம் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு கருவிகளுடன் 1.3 லட்சம் அதிகாரிகளும் ஈடுபடவுள்ளனர்.

v. முதன்முறையாக இந்த கணக்கெடுப்பில் குடிமக்கள் எண்ம சுய பதிவு செய்யும் வகையில் பிரத்யேக வலைதளம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

7. ஜவாரி கோயில் - கஜுராஹோ கோயில் வளாகத்தில் அமைந்துள்ளது. இது மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள உலக பாரம்பரிய தளங்களில் ஒன்றாகும்.

i. அட்டர்னி ஜெனரல் - ஆர்.வெங்கடரமணி

ii. இந்திய தலைமை நீதிபதி - பி.ஆர்.கவாய்

iii. இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் - துஷார் மேத்தா

8. ஸ்ரீசைலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற பிரமராம்பிகை உடனுறை மல்லிகார்ஜுன சுவாமி கோயிலில் பிரதமர் மோடி வழிபாடு மேற்கொண்டார். 12 ஜோதிர் லிங்க

திருத்தலங்களில் ஒன்றான இக்கோயில், 52 சக்தி பீடங்களிலும் ஒன்றாகும். ஜோதிர்லிங்க மும் சக்தி பீடமும் ஒரே கோயிலில் அமையப் பெற்றதால், இத்தலம் தனித்துவம்மிக்கது.

i. ஸ்ரீசைலத்தில் உள்ள ஸ்ரீ சிவாஜி ஸ்பூர்த்தி கேந்திரத்தையும் பிரதமர் மோடி பார்வையிட்டார். கடந்த 1677-இல் ஸ்ரீசைலம் கோயிலுக்கு மாமன்னர் சிவாஜி வருகை புரிந்ததன் நினைவாக நிறுவப்பட்ட இந்த மையத்தின் நான்கு புறங்களிலும் பிரதாப்கட், ராஜ்கட், ராய்கட், ஷிவ்னேரி கோட்டைகளின் மாதிரிகள் அமைந்துள்ளன. சிவாஜி சிலையுடன் தியான மண்டபமும் உள்ளது.